# 7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

## (ஆ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1995), பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

# 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

## (அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்). 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1995). மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1995) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*1995 நவம்பர் 8]* [பேரவைத் தலைவர்]

*பிரிவுகள் 2 முதல் 6 வரை திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதியமைச்சர்.*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1995), மாண்புமிகு சட்ட அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1995)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜி. பழனிசாமி.*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்தச்) சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்தை நான் கூறவிரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக, கேளிக்கை வரியை கள்ளத்தனமாக சினிமா டிக்கட்டுகளை விற்பனை செய்வதன்மூலம் ஏய்க்கிறவர்களைத் தடுக்க, இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் மாவட்ட காவல்துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கிற சினிமா தியேட்டர்களில், குறிப்பாக நடிகர் நடிகைகளின் பெயரால் மன்றங்கள் வந்ததன் காரணமாக அந்த மன்றங்களின் சார்பாக, நடிகர் நடிகைகளுக்கு விழா எடுக்கிற நோக்கத்தோடு, அவர்கள் நடித்த படங்களுக்கான ஊர்வலங்களை தமிழ்நாட்டிலே நடத்தி, அந்தத் தியேட்டர்கள் முன்பாக மிகப்பெரிய விளம்பரங்களைச் செய்து, விழா எடுத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தியேட்டர்

@3-11-1995-ஆம் நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.